விலை: 50.00
பக்கங்கள் - 14
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 182 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 05 வெள்ளிக்கிழமை (19.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இனப்படுகொலையின் அசைக்க முடியாத சாட்சி செம்மணி

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட திட்ட மிட்ட இனப்படுகொலையின் அசைக்க முடியாத சாட்சி யாகவும், இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பெரும் அவ மானத்தின் அடையாளமாகவும் செம்மணி மனிதப் புதை குழி உருவெடுத்துள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி 13ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோரிப் போராட்டம்




13ஆம் பக்கம் பார்க்க

## அரியாலையில் ரயில் விபத்து; சிப்பாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை நெளுங்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற புகையிரத விபத்தில் பலாலி இராணுவ முகாமில் கடமை யாற்றும் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கலேவ, பகலகம, பொன்வெல பகுதியைச் சேர்ந்த லக்மன் பண்டா (வயது-26) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே 13ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் மிகப்பெரிய மனிதப் புதைகுழியான

# செம்மணியைப் பார்வையிட நீதி அமைச்சர் இன்று விஜயம்

(கொழும்பு)



இலங்கையின் மிகப்பெரிய மனிதப் புதைகுழியான செம் மணியைப் பார்வையிட நீதி அமைச் சர் ஹர்ஷண நாணயக்கார இன்று செம்மணிக்கு விஜயம் செய்யவுள் ளார். (03ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நோக்கி பயணித்த பஸ் விபத்து

### ஆசிரியை உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா நோக்கிப் பயணித்த பஸ் விபத் துக்குள்ளானதில் ஆசிரியை ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

நேற்றுக் காலை கண்டி யிலிருந்து வவுனியா நோக் 13ஆம் பக்கம் பார்க்க

## கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட செயலாளர் கைது



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னாள் தனிப்பட்ட செய லாளரான சுகீஸ்வர பண்டார கைது செய்யப்பட்டு எதிர் வரும் ஜூலை மாதம் முத லாம் 13ஆம் பக்கம் பார்க்க

## வலிகாமம் வடக்கு பிரதேச செயலக

## அபிவிருத்திக் கூட்டத்தில் பலத்த வாக்குவாதங்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச செய லக அபிவிருத்திக் கூட்டத்தில் நேற்று பலத்த வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

வலிகாமம் வடக்கு பிரதேச செய லக அபிவிருத்திக்கூட்டம் நேற்று தெல்லிப்பழை பிரதேச செயலகத் தில் இடம்பெற்றது.

பிரதேச செயலக அபிவிருத்திக் குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு 13ஆம் பக்கம் பார்க்க

## 7 எலும்புக்கூடுகள்

### செம்மணியில் அடையாளம்



04ஆம் பக்கம் பார்க்க

24ஆம் திகதி வரை

## கோட்டாவின் மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

தன்னைக் கைது செய் வதைத் தடுக்கக்கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த ரிட் மனு 13ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங் கிணைப்புக்குழுக் கூட்ட மானது இன்று வெள்ளிக் கிழமை மு.ப 9.00 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற் றும் கடல் வளங்கள் அமைச் சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங் கம் சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அவர்களின் இணைத் தலை மையில் குறித்த கூட்டம் நடைபெறவுள்ளது. (ம-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL

# THE OPEN UNIVERSITY OF SRI LANKA
## JAFFNA REGIONAL CENTRE

**ADMISSION OPEN-2026**

Applications are invited for the following Degree Programmes

### Bachelor of Pharmacy (Hons)

Application Period : 15th May 2026 - 25th June 2026

Eligibility Requirements :
- Three (03) passes in the Science Stream at the G.C.E. A/L
- A minimum Credit Pass (C) in Chemistry at the G.C.E A/L
- A minimum Simple Pass (S) in English at the G.C.E O/L
- Test and / or Interview
- Equivalent qualifications may be considered

### Bachelor of Medical Laboratory Sciences (MLS) (Hons)

Application Period : 15th May 2026 - 25th June 2026

Eligibility Requirements :
- Three (03) passes in Science Stream including Chemistry at the G.C.E. A/L
- A minimum Simple Pass (S) in English at the G.C.E O/L
- Test and/or Interview
- Equivalent qualifications may be considered

### Bachelor of Science (Hons) in Nursing

Application Period : 20th June 2026 - 26th July 2026

Eligibility Requirements :
- Diploma in Nursing / General Certificate in Nursing (MOH/OUSL)
- Three (03) passes in the Science Stream at the G.C.E. A/L (one sitting)
- A minimum Simple Pass (S) in English at the G.C.E O/L
- Exceptional Performance in selection interview
- Equivalent qualifications may be considered

### B.Sc (Hons) in Psychology

Application Period : 20th June 2026 - 26th July 2026

Eligibility Requirements :
- Three (03) passes in Advanced Level (A/L) Examination (Any Stream) OR
- OUSL Foundation Courses (60 credits equivalents)
- Minimum Simple Pass (S) in English at the G.C.E.O/L
- Equivalent qualifications may be considered

**Apply through :** http://reginfo.ou.ac.lk/applyonline/ Apply Online only

**CONTACT DETAILS**
Jaffna Regional Centre
The Open University of Sri Lanka
021 222 3374
www.ou.ac.lk

(C-5862)

The Registrar, The Open University of Sri Lanka, Nawala, Nugegoda.

OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL

## NORTHERN PROVINCIAL COUNCIL

# WALK-IN INTERVIEW

**Recruitment of Technical Staff on a Contract Basis**
**Infrastructure Development Works for Areas Affected by the "Ditwah"**
**Cyclone-Northern Province**

The Northern Provincial Council invites applications from suitably qualified candidates for recruitment on a contract basis to the following positions under the Infrastructure Development Works Programme for Areas Affected by the " Ditwah" Cyclone in the Northern Province.

Engineer (Civil) - 10 Posts
Draughtsman - 05 Posts
Technical Officer - 20 Posts
Work Supervisor - 17 Posts

Interested and eligible candidates are invited to attend the Walk-In Interview according to the schedule given below:

**Date :** 25 June 2026
**Time :** 10.00 a.m.
**Venue :** Chief Secretary's Secretariat, Northern Province

Further particulars, including qualifications and other relevant information, are available on the official website of the Northern Province **(www.np.gov.lk).**

**Thanuja Murugeson,**
Chief Secretary,
Northern Province.

(C-5864)

**E-mail :** ***chiefsecnpc@gmail.com***
**Contact Number : 021 222 0840**

# ஆதன உரிமை பெயர் மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | - | மயிலிட்டி உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | - | றொணி பெண் சுகிர்தா |
| விண்ணப்பதாரர் பெயர் | - | றொணி பெண் சுகிர்தா |
| முகவரி | - | மடம் வீதி வசாவிளான் |

இவ்வாதனம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 15 இல் தெல்லிப்பளை வல்லை வீதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனம் பிரசித்தநொத்தாரிஸ் செக்ஸ்ரஸ் றொசாறியோ ஜெனோசியா நிரோசினி முகதாவில் உறுதி இலக்கம் 790ம் இலக்கத்தில் 11.06.2024 அன்று நிறைவேறிய நன்கொடை உறுதியின் பிரகாரம் குறித்த **றொணி பெண் சுகிர்தா** சொந்தமும் உரிமையுமாய் இருந்து வந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியில் உள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V.தவராஜா அவர்களின் வரைபட இலக்கம் 9354 (29.05.2026)இன் படி துண்டு 1 ஆகும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை வலிவடக்கு பிரதேச செயலகம் கிராம அலுவலர் பிரிவு J/244 **"பெரியான் கலட்டி மறுபெயர் கலட்டி"** நிலப்பரப்பு 02 குளி 9 இதற்கு எல்லைகள்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஞானப்பிரகாசம் பெண் அக்காச்சியின் ஆதனம் |
| கிழக்கு | : | அப்புத்துரை யேசுராசாவுக்கும் பெண் றீற்றாவுக்குரிய ஆதனம் |
| மேற்கு | : | கல்லறைக் கோயில் ஒழுங்கை |
| தெற்கு | : | ஒழுங்கை |

மேற்குறித்த ஆதனத்தை றொணி பெண் சுகிர்தா என்னும் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளி நாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** (7872)

# INVITATION FOR BID 2026/08
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Procurement Committee**, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via **Performance-Based Capital Grant.**
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**, To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below.
**"Bidders Shall also register themselves with the Register of Public Contracts Sri Lanka, in terms of the Public Contract Act No 03 of 1987.**
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days **from 2026-06-19 To 2026-07-02** during **09:00 hrs To 15:00 hrs**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam East Pradeshiya Sabha**, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail. Com)** from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of nonrefundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur** on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur** as stated in table below.
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2026-06-19 To 2026-07-02 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 2026-06-26 |
| Closing and Opening of Bids | At 2.00 P.M on 2026-07-03 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (Without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft / Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| 2026/NP/C-2504/03 | Modernization & Digitalization of the Atchuvely Public market | 12.06 | 105 | C7, C6 & C5 (Building) | 5,000.00 | 121,000.00 | 16.10.2026 | 77 |

Chairman,
Divisional Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur (7872) **19.06.2026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் முறையான அங்கீகாரமின்றி

## பாடசாலைகளில் திட்டங்களை முன்னெடுக்க அனுமதியில்லை

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

பல்வேறு அமைப்புகள் மற்றும் குழுக்களால் முன்மொழியப்படும், அரசாங்கத்தின் முறையான அங்கீகாரத்தைப் பெறாத எந்தவொரு திட்டமும் எந்தக் காரணம் கொண்டும் பாடசாலைகளுக்குள் செயற்பட அனுமதிக்கப்படக் கூடாது என்று பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் உள்ள வடமத்திய மாகாண சபை வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடமத்திய மாகாண கல்வி அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக அரசாங்கம் என்ற ரீதியில் பாரிய அர்ப்பணிப்புகளைச் செய்து வருவதாகக் குறிப்பிட்ட பிரதமர், மாணவர்களுக்கு எப்போதும் சிறந்தவற்றையே வழங்க வேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே கல்வி சார்ந்த அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வடமத்திய மாகாணத்தின் கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இந்த கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டதுடன், தரம் 5 புலமைப்பரிசில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைகளின் இலக்குகளை அடைவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். மாகாண மற்றும் வலய மட்டத்தில் செயற்படுத்தப்படும் பாடம் சார்ந்த திட்டங்களின் தற்போதைய நிலவரங்கள்.



"டித்வா" சூறாவளியினால் சேதமடைந்த பாடசாலைகளை புனரமைப்பது குறித்த விடயங்கள் மாகாண கல்வி அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகள், ஆசிரிய-மாணவர் நலன்புரி மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் தீர்வு ஆகிய விடயங்கள் பிரதமரால் கவனம் செலுத்தப்பட்டது.

கல்வியின் தரம் என்பது வெறும் பரீட்சை முடிவுகளால் மாத்திரம் தீர்மானிக்கப்படுவதில்லை என சுட்டிக்காட்டிய பிரதமர், பாடத்திட்டங்களுடன் தொடர்புடைய ஏனைய செயற்பாடுகளிலும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார். (நி)

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண

## இந்தியா செல்கிறார் கடற்றொழில் அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை மற்றும் தமிழக கடற்றொழிலாளர்களுக்கு இடையிலான எல்லைப் பிரச்சினைக்கு இராஜதந்திர முறையில் தீர்வுகாண, எதிர்வரும் ஜூலை மாதத்தில் இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களைத் தடுக்க கடற்படை மூலம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதேவேளை, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்ட இராஜதந்திர பேச்சுவார்த்தைகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் முதற்கட்ட கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டுள்ளன.

இந்த விஜயத்தின் போது, தமிழக முதலமைச்சர் விஜய் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரைப்படங்களில் நீதிக்காகப் போராடிய அதே நேர்மையை முதலமைச்சர் விஜய் அரசியலிலும் வெளிப்படுத்துவார் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், பரஸ்பர புரிந்துணர்வின் மூலம் இரு நாட்டு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும், கடல் வளங்களும் பாதுகாக்கப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி)

# சட்டத்திலிருந்து தப்ப சலேயை

## பகடைக்காயாக பயன்படுத்துகின்றனர்

### அமைச்சர் சமந்த எச்சரிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முன்னாள் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சலே மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட எவராக இருந்தாலும் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் சிறை செல்லத் தயாராக வேண்டும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தேசிய ஏற்றுமதி திட்டம் 2026 - 2030 உத்தியோகபூர்வமாக அறிமுக நிகழ்வினை தொடர்ந்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி)

# செம்மணியை...

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து அடையாளம் காணப்பட்ட மனித என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 400ஐ அண்மித்துவரும் நிலையில் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார உள்ளிட்ட விசேட குழுவினரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தின் ஆணையாளர்கள் உள்ளிட்ட குழுவினரும் இன்று (19) வெள்ளிக்கிழமை செம்மணிமனிதப் புதைகுழிப் பகுதிக்கு களவிஜயம் செய்யவுள்ளனர்.

இதேவேளை செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 28ஆம் நாளான நேற்றைய தினமும் ஒரு குழந்தையின் என்புக்கூடு உட்பட 5 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக 07 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனடிப்படையில் **இதுவரையிலான அகழ்வுப் பணிகளின் போது, 387 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 367 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.** (நி)


# பெறுகை அறிவித்தல்

# பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி

1. **தலைவர் பெறுகைக்குழு, பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி, வடமாகாணம்.** சபை நிதியின் கீழ், கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இணைப்புக்கள் மற்றும் மென்பொருட்களை வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் வழங்குநர்கள் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணத்தின் **பகுதி 4** இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
5. பொருத்தமான மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்கள் இதற்கான ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பெறுகைக்குழு. பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி** எனும் இடத்தில் **22 ஜூன் 2026** ஆம் திகதியிலிருந்து **06 ஜூலை 2026** வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் பார்வையிடவும், மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா 3000/-** செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். மேலும் எமது அலுவலக தொலைபேசி/தொலைநகல் இலக்கம் **021-226-3276**, e.mail pointpedrops@gmail.com என்பன ஊடாகவும் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
7. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, பருத்தித்துறை, பிரதேசசபை, புலோலி** எனும் முகவரிக்கு **07 ஜூலை 2026** ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும் கேள்விதாரர் கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்வி திறக்கப்படும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி திறத்தலிற்கு கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
8. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி திகதியிலிருந்து **49 (நாற்பத்து ஒன்பது) நாட்கள் (25.08.2026)** வரை செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழ் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | விபரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் | கேள்விப் பிணை | | வேண்டப்படும் செயலாற்றுகை பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளளிக்கும் பிணைப் பணம் | செல்லுபடியாகும் காலம் | பிணை தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41/(11)/2/5/E- LIBRARY/2026 | Establish local area network (Data), Library Management System and Online Public Access catalog (OPAC). | 02 மாதம் | 3,000.00 | 6,000.00 | 22.09.2026 | 33,000.00 | 11.10.2026 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பருத்தித்துறை, பிரதேசசபை,**
**புலோலி.**

19.06.2026

(C-5857)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# INVITATION FOR BIDS (IFB) - 2026/03

## URBAN COUNCIL, CHAVAKACHCHERI COUNCIL FUND

1. The Chairman, Procurement Committee, on behalf of Chavakachcheri Urban Council now invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026.06.19 until 2026.07.09 from 09:00 hrs to 15:00 hrs.
4. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 1 Documents.
5. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below. **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman/ Secretary, Chavakachcheri Urban Council, Chavakachcheri (T.P No: 021 227 0498, 021 227 0041 Fax No: 021 227 0079) during the period from 2026.06.19 until 2026.07.09 from 09:00 hrs to 15:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Procurement Committee, Chavakachcheri Urban Council, Chavakachcheri at or before 10.30 hrs, 2026.07.10 Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Chavakachcheri Urban Council, Chavakachcheri commencing at 11.30 am on 2026.06.30
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Document Issuing/Purchasing Period | | | | | | From 2026.06.19 until 2026.07.09 | | | | |
| Pre-Bid Conference | | | | | | At 11.30 A.M on 2026.06.30 | | | | |
| Closing and Opening of Bids | | | | | | At 10.30 A.M on 2026.07.10 | | | | |
| S No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security/Bank Draft/Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | | | Security Amount | Validity Period | |
| 01 | NP/14/41(3)/2 /CF/18/2026 | Construction of Chavakachcheri Shopping Complex Ground Floor – Stage I | Council Fund | 93.08 Mn | 180 Days | C5,C4 &C3 (Buildings) | 20,000.00 | 931,000.00 | 06-11-2026 | 91 Days |

Chairman,
Procurement Committee
Urban Council, Chavakachcheri.
19.06.2026

(C-5861)

## 07 எலும்புக்...

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து புதிதாக நேற்று 7 மனித எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு ஏற்கெனவே அடையாளம் காணப்பட்டுள்ள ஒரு குழந்தையின் எலும்புக்கூடு உட்பட 5 எலும்புக் கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 28ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்று நடைபெற்றன.

நேற்றைய அகழ்வில் சான்றுப் பொருட்களாக சிறு பாசிமணி துண்டு, கை வளையல், ஆணிகள் பிளாஸ்ரிக் என்பவை மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை பாரிய உலோகத் துண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அதற்குள் எலும்புக் கூடுகள் காணப்படுவதனால் அதனைப் பக்குவமாக சுத்தப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

(ம-7,33)

## ஈர விழிகளுடன் எம் இதய அஞ்சலி



அன்னையின் மடியில்
17 - 11 - 1951

அம்பிகை அடியில்
17 - 06 - 2026

### திரு. சொக்கலிங்கம் சிவபாலன் (சிப்பி)

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
இப்புவியில் பெருமை சேர்த்தாய்
இல்லறத்தில் இன்பமாய் வாழ்ந்து
நல்லறத்தில் பல ஆண்டு கழித்து
இன்புற்று வாழும் காலம் – இறைவனுக்கு
இனிபோதுமென்றாகி விட்டதென்றோ
விதியின் வினைப்பயனாய்
விண்ணுலகிற்கு சென்றுவிட்டீர்
அன்பான பேச்சு பண்பான குணம்
பாசத்துடன் அரவணைக்கும்
உயர்ந்த உள்ளம் கொண்டவரே
உங்களோடு பயணித்தவர்கள்
என்றென்றும் உங்களை மறக்கமாட்டார்கள்
எங்கள் நினைவில் வாழும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பூபாலசிங்கம் புத்தகசாலை
கொழும்பு - யாழ்ப்பாணம்

(c-5865)

# இராசிபலன்

19.06.2026
ஆனி 05, வெள்ளிக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 11.05 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 4.02 மணிவரை
சுப நேரம் 5.54-7.24 மணிவரை
இராகுகாலம் 10.24-11.54 மணிவரை

சந்திராஷ்டமம்:பூராடம், உத்தராடம்

**வளவன்**




அழகுசாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு.




கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, பொறுமையால் பெருமை காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




பயணங்களின் போது கூடுதல் விழிப்புணர்வு அவசியம், விருந்தினர் சந்திப்பால் சுபவிரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.




குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.




விருந்தினர்களின் வருகையுண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள் போசன சுகமுண்டு.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கட்டிடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**ஆழ்ந்து சிந்திக்க அதிக நேரம் ஒதுக்குங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அமெரிக்கா - ஈரான் இடையே அமைதி ஒப்பந்தம் கைச்சாத்து

**(கொழும்பு)**

**கடந்த மூன்று மாதங்களாக மேற்காசியாவில் நீடித்து வந்த போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், அமெரிக்காவும் ஈரானும் 14 அம்ச இடைக்கால அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.**

பிரான்ஸின் வேர்சாய் அரண்மனையில் உத்தியோகப்பூர்வமாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த உத்தியோகப்பூர்வ ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியான் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் உடனடியாக அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னேற்றம் குறித்து பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் கருத்துத் தெரிவிக்கையில், இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உடனடியாக அமுலுக்கு வரும் என உறுதிப்படுத்தினார்.

பிரான்சின் வேர்சாய் அரண்மனையில் நடைபெற்ற இரவு விருந்தின் போது, தாம் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த 14 அம்ச இடைக்கால ஒப்பந்தத்தில், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருதல், விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் குறித்த தளர்த்தல்கள், ஹோர்முஸ் நீரிணை ஊடான கடல்சார் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஒப்பந்தம் எட்டப்பட்டாலும் ஹார்முஸ் பழைய நிலைக்குத் திரும்பாது

### ஈரான் சபாநாயகர் திட்டவட்டம்



(டெஹ்ரான்)

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையில் அறுபது நாள் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ள பின்னணியில், ஹார்முஸ் நீரிணை போருக்கு முந்தைய நிலைக்குத் திரும்பாது என ஈரான் பாராளுமன்ற சபாநாயகர் பாகிர் காலிபாஃப் தெரிவித்துள்ளார்.

ஜி7 மாநாட்டில் எட்டப்பட்ட இந்த வரலாற்று உடன்படிக்கையின்படி, லெபனான் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் போரை நிறுத்தி, ஹார்முஸ் நீரிணையின் கடல் முற்றுகையை முப்பது நாட்களுக்குள் நீக்க அமெரிக்கா இணங்கியுள்ளது.

இதற்குப் பதிலாக தனது அணு ஆயுதத் திட்டங்களை நிறுத்த ஈரான் ஒப்புக் கொண்டுள்ளது. எனினும், ஹார்முஸ் நீரிணையில் வழங்கப்படும் சேவைகளுக்கு ஈரான் கட்டணம் வசூலிக்கும் என சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஈரானின் பொருளாதார மறுசீரமைப்பிற்கு முந்நூறு பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நெடுந்தீவு பிரதேசசபை கேள்வி மனு கோரல்

- **கேள்வி விண்ணப்ப விநியோக காலம் :-19.06.2026 தொடக்கம் 02.07.2026 வரை (அலுவலக நாட்களில் மு.ப.9.00 -பி.ப 3.00 வரை)**
- **கேள்வி மனுக்கள் ஏற்கும் இறுதித் திகதி :- 03.07.2026 மு.ப 10.00 மணி வரை**
- **கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 03.07.2026 மு.ப 10.00 மணி**

1. நெடுந்தீவு பொதுச் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள பிரதேசசபைக்கு சொந்தமான கடையை **நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான** கேள்வி மனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. நெடுந்தீவு பிரதேசசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் நெடுந்தீவு பிரதேசசபை அலுவலகத்தில் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளித்து கேள்விமனுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
3. கேள்வி விண்ணப்பங்களைப் பெற விரும்புவர்கள் தத்தமது தேசிய அடையாள அட்டை, கிராம சேவகரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மற்றும் குடும்ப வதிவிட அட்டை ஆகியவற்றின் மூலப்பிரதியையும், நிழற்பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். (நிழற்படப் பிரதிகள் உறுதிப்படுத்திய பின்னர் மூலப்பிரதிகளை மீளப் பெற்றுக்கொள்ளலாம்)
4. கேள்வி மனுக்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதான வீதி நெடுந்தீவு"** என்ற முகவரிக்கு நேரடியாகவோ/தபாலிலோ அனுப்பிவைப்பதுடன், இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கு நேரடியாகவோ/பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி/ இணைப்பிரதி என்பதை தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். **03.07.2026 மு.ப 10.00 மணிக்குப்** பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவித காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. எந்தவொரு கேள்வி பத்திரங்களையும் முழுவதுமாகவோ பகுதியளவாகவோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
6. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
7. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதம் பெற்றுக் கொண்ட திகதியிலிருந்து **07 (ஏழு)** நாட்களுக்குள் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் (Key Money) செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
8. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எவ்வித நிலுவைக்கட்டணங்களையும் முன்னைய காலங்களில் அல்லது நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக இருந்தால் அவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்படமாட்டாது.
9. அதிகூடிய கேள்வித்தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன், அவர் குத்தகை எடுக்கத் தவறின் அடுத்தநிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்தியாக அமைந்தால் மட்டுமே பரிசீலிக்கப்படும்.
10. கேள்வி திறத்தலின் போது கேள்விதாரர் அல்லது எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் பார்வையாளராக கலந்து கொள்ளமுடியும்.
11. இதர மேலதிக விபரங்கள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கங்களை பிரதேசசபையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.


| கடை இலக்கம் /விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி மனு வைப்புப் பணம் (மீளளிக்க கூடியது) | கேள்வி விண்ணப்ப கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| கடை இல 03 | 624,000.00 | 2,600.00 | 63,000.00 | 2,000.00 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**நெடுந்தீவு பிரதேச சபை.**

**19.06.2026**

(C-5858)

# கண்ணீர் அஞ்சலி



இளைப்பாறிய நில அளவையாளரும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்க உறுப்பினரும், பதிவு பெற்ற நில அளவையாளரும் ஆகிய

அமரர். **ஆறுமுகம் தங்கமயில்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(7867)

**உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் (வட பகுதி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்வளை பிள்ளையாருக்கு இன்று கொடி

(சண்லிப்பாய் )

சண்லிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (8-110)

# ஏ.சி.பாம் கிராம மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுங்கள்

## ரவிகரன் எம்.பி வலியுறுத்து



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் கிராமங்களைச் சேர்ந்த மக்களையும், ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட ஏ.சி.பாம் கிராம மக்களையும் மீள்குடியேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் குறித்த கிராமங்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பில் விசேட கூட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு இதன்போது முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் உத்தரவிட்டதுடன், அந்தக் கலந்துரையாடலில் குறித்த மீள்குடியேற்றங்கள் தொடர்பில் கலந்துரை யாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற வீதி, போக்குவரத்து மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான விசேட உபகுழுக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# கலாசாலையில் திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

மணிவாசகர் குருபூசையையொட்டி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்துமன்றம் நடத்தும் திருவாசக விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலாசாலையின் பழையமாணவரும் மகாஜனக் கல்லூரி ஆசிரியருமாகிய சைவப்புலவர் கலாநிதி ஏ. அனுசாந்தன் சைவத்தின் ஆணிவேர் திருவாசகம் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றுவார். (8-33)

# மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆலயமும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்தும் "மாணிக்க வாசகர் குருபூசை நிகழ்வு" நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆதீன அறக்கட்டளையின் நிர்வாக சபை உறுப்பினர் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் "மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்" எனும் தொனிப் பொருளில் கலாநிதி.செ. திருநாவுக்கரசு சிறப்புரை ஆற்றுவார்.(8)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடாத்தும் மாணிக்கவாசகர் குருபூசை தினம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சைவபரிபாலன சபை ஆச்சிரம மண்டபத்தில் நிர்வாக சபை உறுப்பினர் செல்வி. நா.நீலாம்பிகை தலைமையில் நடைபெறும்.

சைவபரிபாலன சபையின் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு கஜேந்திரகுமார் எம்.பி விஜயம்



(சாவகச்சேரி)

ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் குறித்து வைத்தியசாலை நிர்வாகத்துடன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும்தொழிநுட்பவியல்கற்கை நெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிகள்மாவட்ட அலுவலக கணணி பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 - 25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதி 2026.07.12 ஆகும்.

விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட முகாமையாளர் இ.திருமுருகன் அறிவித்துள்ளார். (8)



அரச சேவைகள் ஓய்வுதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் தாய்ச்சங்க வெள்ளிவிழா அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்ட சங்கத் தலைவர் அ. அருந்தவநேசன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை எவராலும் உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்களான மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், கைத்தொலைபேசிகள், மணல் போன்ற பொருட்கள் எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

குறித்த பகிரங்க ஏலத்தில் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவோ அல்லது வங்கிஅட்டை மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலும் ஏலத்தில் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டுமெனவும், அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களினை உடனடியாக வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டுமெனவும் ஏற்பாட்டாளர் அறிவித்துள்ளார். (8)

# வடமராட்சி கடலில் காணாமல்போன மீனவரின் பிள்ளைகளின் கல்விச் செலவை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பொறுப்பேற்பு!

(கரணவாய்)

வடமராட்சி கடலில் அண்மையில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ள பருத்தித்துறை - முனை பகுதியை சேர்ந்த சுமியோம் பிள்ளை சுஜிக்குமாரின் இரு பிள்ளைகளின் கல்விச் செலவு முழுவதையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொறுப் பேற்றுள்ளது.

பருத்தித்துறை - முனை மற்றும் கற்கோவளம் பகுதிகளில் இருந்து கடந்த மே மாதம் 27 ஆம் திகதி இரவு இரண்டு படகுகளில் கடலுக்குச் சென்ற நான்கு மீனவர்கள் காணாமல் போயிருந்தனர்.

அவர்களில் ஒருவரான சுமியோம்பிள்ளை - சுஜிக்குமாரின் இரண்டு பிள்ளைகளான க.பொ.த. சாதரண தரம் மற்றும் நான்காம் தரத்தில் கல்வி கற்றுவரும் இரு மாணவர்களும் கல்வியை தொடரும் வரை முழுமையான கல்விச் செலவினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொறுப் பேற்றுள்ளது.

பருத்தித்துறை கோரியடி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(8-60)



வடமராட்சி புற்றளை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு போட்டி முன்பள்ளி அபிவிருத்தி குழுத் தலைவர் சண்முகநாதன் தனஞ்ஜெயன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

(படம்: மகாலிங்கம்)

# பல்லவராயன்கட்டு கிழக்கு பிரிவிற்கு பிறப்பு, இறப்பு பதிவாளர் நியமனம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பல்லவராயன் கட்டு கிழக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளராக தெரிவு செய்யப்பட்ட திருமதி கஜதீபன் விதுஜா அண்மையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனிடம் தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.


இந்நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் மாவட்ட காணிப் பதிவாளரும் கலந்து கொண்டார்.

பல்லவராயன்கட்டு கிழக்கு பிரிவிற்கு நீண்டகாலமாக பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் நியமிக்கப்படாத நிலையில், பல்லவராயன்கட்டு மேற்கு பிரிவின் பதிவாளரே பதில் கடமையாற்றி வந்தார்.

இந்நிலையில், பல்லவராயன்கட்டு கிழக்கு பிரிவிற்கென தனியான பதிவாளர் நியமிக்கப்பட்டுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 40 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் குருக்களை வாழ்க வளத்துடன் என வாழும் போதே வாழ்த்துவோம்



1986
Standing (L-R): Nicholas Croos (OMI) T. Jesuthasan (Jaffna) R.Stalin (Jaffna) Rev.Fr.Philip Ponniah (Rector) G.Saverimuttu (Jaffna) Christy Selvarajah (IVD) Ruban Mariampillai (Jaffna) S.Nicholas (OMI).

1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் திகதி இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண மறைமாவட்ட புனித மரியன்னை பேராலயம் விழாக் கோலம் பூண்டு இருந்தது.

புனித மரியன்னை பேராலய மணிகள் மகிழ்வின் மங்கள ஓசை எழுப்பி வாருங்கள் இறைமக்களே பலி செலுத்த வாருங்கள் பண் இசைத்து பாடுங்கள் வாருங்கள் இறைமக்களே என அழைத்து நின்றன.

(01) இராஜேந்திரம் இஸ்ரலின் அடிகளார் (02) அருள்தந்தை ஜெராட் சவரிமுத்து அவர்கள் (03) ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் (04) சந்திரபோஸ் குறூஸ் அ.ம.தி. அடிகளார் (05) தொம்மையப்பு இயேசுதாசன் சந்திரன் அடிகளார் (06) செபஸ்ரி நீக்கிலஸ் அ.ம.தி. அடிகளார் (07) கிறிஸ்ரி செல்வராஜா தி.பணி.அடிகளார் ஆகியோர் இதோ வருகிறோம் .எனப் பகிரங்கமாக அறிக்கையிட்டு - பிடுங்கவும் தகர்க்கவும் அழிக்கவும் கவிழ்க்கவும் கட்டவும் நடவும் இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன் - (எரேமியா 1:10) என்ற வார்த்தைகளை ஏற்று நின்றனர்.

அப்போதைய யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை 1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் திகதியன்று தனது கணீர் என்ற கம்பீரத் தொனியில் நீர் நிகழ்த்தவிருக்கும் மறைபொருளின் உட்பொருளை உணர்ந்து கொள்ளும். உமது வாழ்விற்கேற்ப புனிதராய் இரும். சமாதானம் உம்மோடு இருப்பதாக என்ற அபிசேக வார்த்தைகளைச் சொல்லி திருநிலைப் படுத்தினார்.

## இராஜேந்திரம் இஸ்ரலின் அடிகளார்



இராஜேந்திரம் இஸ்ரலின் அடிகளார் உரும்பிராயில் திரு. நீக்கிலாப்பிள்ளை இராஜேந்திரம் திருமதி.சின்னத்தம்பி இராஜேஸ்வரி தம்பதியினரின் மகனாக 08 ஜூன் 1955 ஆம் ஆண்டு பிறந்தார்.

1978 - 1981 மெய்யியற் கல்வி இந்தியா சென்னை பூந்தமல்லி திரு இருதய குருத்துவக் கல்லூரி.

1986 - 1987 உதவிப் பங்குத் தந்தை இளவாலை - சேந்தாங்குளம்

1987 - உதவிப் பங்குத் தந்தை கிளிநொச்சி - அக்கராயன் குளம்

1987 - 1988 உதவிப் பங்குத் தந்தை யாழ் புனித மரியன்னை பேராலயம்

1988 - 1989 பங்குத் தந்தை ஊறணி

1989 - 1994 பங்குத் தந்தை முல்லைத்தீவு

1994 - 1997 பங்குத் தந்தை முகமாலை

1997 - 2001 உளவியல் ஆற்றுப்படுத்தல் மற்றும் வழிகாட்டல் முது விஞ்ஞானமாணிப் பட்டக் கல்வி பிலிப்பைன்ஸ்

2001 - 2002 பங்குத் தந்தை நாரந்தனை

2002 - உளவியல் உள ஆற்றுப்படுத்தல் கற்கைகள் துறை விரிவுரையாளர் யாழ் பல்கலைக் கழகம்

2003 - 2005 பங்குத் தந்தை பாசையூர்

2013 - 2015 யாழ் மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத் தலைவர்

2010 - 2015 யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுக்கட்டுரை நன்நெறி மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்

2006 - 2015 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நல்லாயன் ஆன்மீகப் பணியக இயக்குநர்.

இவர் 05 உள ஆற்றுப்படுத்தல் துறை சார்ந்த நூல்களையும் 02 சுயவளர்ச்சி மொழி பெயர்ப்பு நூல்களையும் எழுதியுள்ளார். இந்த நூல்கள் 04 விருதுகளைப் பெற்றுள்ளது.

2016 - 2023 யாழ் மறைமாவட்ட அகவொளி குடும்ப மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர்.

2023 - முதல் இன்று வரை பங்குத் தந்தை கொய்யாத் தோட்டம்.



இன்று இந்த எழுவரில் கிறிஸ்ரி செல்வராஜா தி.பணி. அடிகளார் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறுகிறார்.



செபஸ்ரி நீக்கிலஸ் அ.ம.தி.அடிகளார் அமலமரித் தியாகிகளின் ஆவணக் காப்பக பொறுப்பாளராக அரும்பணி ஆற்றியுள்ளார். மறைஉரைஞராகத் தனது மறை உரைகளால் பல மனதுகளைத் தொட்டு நெறிப்படுத்தி வழிகாட்டியுள்ளார். தற்போது உடல் நலக்குறைவு காரணமாக அமலமரித் தியாகிகளின் கொழும்புத்துறை அமல உற்பவத்தில் ஓய்வு நிலையில் உள்ளார்.

இவர்கள் நடந்து கடந்த இந்த 40 ஆண்டு காலப் பயணப் பாதையைத் திருப்பிப் பார்த்து இவர்களின் பன்முகப் பணி வாழ்வை வாழ்த்தி இறைவனுக்கு நன்றி கூறி இவர்களின் தொடரும் பணி வாழ்வு சிறக்க வாழ்க வளமுடன் என வாழ்த்தி இவர்களுக்காக இறைவேண்டுதல் செய்ய அழைப்பதே இந்த வாழ்த்து மலர் வெளியீட்டின் நோக்கமாகும்.

**வாழ்த்து மலர் வெளியீடு : செய்தியாளர் மரியதாஸ் நியூட்டன் - ஊடக தூது மடல் மற்றும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் ஆலோசகர் - கடவுளின் மனிதம் யூரியூப் தள இயக்குநர்.**

இவர்களின் தனிப்பட்ட வாழ்வை அலச முன்னர் இவர்கள் எல்லோரும் தமது இறையியற் கல்வியை இலங்கை கண்டி அம்பிட்டியா தேசிய குருத்துவக் கல்லூரியிலும் (1982 - 1983) கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் (1984 - 1985) கற்றனர் என்பது குறிப்பிடப்பட வேண்டிய பொதுவான விடயமாகும்.

## அருள்தந்தை ஜெராட் சவரிமுத்து



அருள்தந்தை ஜெராட் சவரிமுத்து அவர்கள் திரு.செல்லம் பீற்றர் சவரிமுத்து (எழுதுவினைஞர்), திருமதி.மார்கிறட் பஸ்தியாம்பிள்ளை(ஆசிரியை) தம்பதிகளின் மகனாக 1955 ஆம் ஆண்டு பிறந்தார்.இவருக்கு ஒரு தம்பி ஒரு தங்கை உள்ளனர்.

பாடசாலைக் கல்வி : புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்.

1974 : மெய்யியல் புகுமுகக் கல்வி பாப்பிறை குருத்துவக் கல்லூரி புனே இந்தியா.

1975 - 1979: விஞ்ஞானமாணி பட்டப் படிப்பு : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1980 : மெய்யியல் கல்வி: தேசிய குருத்துவக் கல்லூரி அம்பிட்டியா கண்டி

1986 : மயிலிட்டி - ஊறணி இரட்டைப் பங்கிலே ரீ.ஈ.தேவராஜன் அடிகளாருக்கு உதவிப் பங்குத் தந்தை.

1987 : பரந்தன் பங்கின் பதில் பங்குத் தந்தை.

1988: யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலே உருவாக்குனர் மற்றும் மெய்யியல் விரிவுரையாளர்.


1993 - 1995 : இந்தியா புனே நகர் ஞானதீபா குருத்துவ நிறுவனத்திலே மெய்யியல் முதுமாணிப் பட்டம்.

இன்று யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலே உருவாக்குனராகவும் மெய்யியல் துறைத் தலைவராகவும் துணை அதிபராகவும் பணியாற்றி வருகிறார்.

8 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

7ஆம் பக்கத் தொடர்ச்சி...



## ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார்

ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் சில்லாலையில் திரு. சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை (உடையார்) திருமதி. மரியாம்பிள்ளை மரியம்மா செல்லம்மா தம்பதியினரின் மகனாக 24 ஜூன் 1959ஆம் ஆண்டு பிறந்தார்.

1978 - 1981 மெய்யியற் கல்வி இந்தியா சென்னை பூந்தமல்லி திரு இருதய குருத்துவக் கல்லூரி.

1986 - 1987 உதவிப் பங்குத் தந்தை யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயம்.

1987 - 1988 பங்குத் தந்தை மண்டைதீவு - அல்லைப்பிட்டி

1988 - 1991 பங்குத் தந்தை கரம்பொன் - மெலிஞ்சிமுனை - சுருவில்

1988 - 1991 பெரதெனியா பல்கலைக்கழக கலை இளங்கலைமாணிப் பட்டக்கல்வி.

1992 - இறையியல் இளங்கலைமாணிப் பட்டக்கல்வி. (பி.ரீ.எச்.உ ரோம்)

1993 - 2000 பிறற்ரேனிற்றி என்ற குருக்களுக்கான ஆங்கில செய்தி இதழின் ஆசிரியர்.

1992 - 1993 அரியாலைப் பங்கின் முதற் பங்குத் தந்தை.

1993 - 1997 யாழ் கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நிதி முகாமையாளர் - ஆரம்ப மெய்யியல் பிரிவின் பொறுப்பாளர் - வழிபாட்டியல் விரிவுரையாளர்.

1996 - இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஊடகவியற் சான்றிதழ் பட்டக்கல்வி.

1995 - 1996 இடப்பெயர்வின் போது கிளிநொச்சியில் புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் அதே பணிகள்

1996 - 1997 கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் ஆரம்ப மெய்யியல் துறையின் பொறுப்பாளராக மடுப்பதியில் இருந்து புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி திரும்பவும் 1997ஆம் ஆண்டு யாழ் நகருக்கு வரும் வரை பணி.

1996 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் ஒரு மாத கால (ஏப்ரல் 10 - மே 10 1996) குருத்துவ உருவாக்கல் பற்றிய பயிற்சி.

1997 - 2007 ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் - புனித வளன் கத்தோலிக்க அச்சக அதிபர் - யாழ் மறைமாவட்ட சமுகத் தொடர்பு ஆணைக் குழுவின் இயக்குநர்.

சர்வதேச கத்தோலிக்க ஊடக ஒன்றிய மாநாடுகளில் (யூசிப்) 1997 - பிரான்ஸ் யுனஸ்கோவில் 1998 - சுவிற்சலாந்து பிறைபோக் நகரில் 1998 - லெபனான் நாட்டில் பங்கு பற்றல்.

1998 - வத்திக்கானில் திருத்தந்தை யோவான் பவுல் பாப்பரசருடன் பார்வையாளர் சந்திப்பு.

1997 - 1998 யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை வருகை விரிவுரையாளர்.

1997 - 1999 யாழ் சுண்டிக்குழி புனித யுவானியார் ஆலயப் பங்குத் தந்தை.

2004 - ஊடக முதுநிலை பட்ட பின் டிப்ளோமா பட்டக்கற்கை.

2004 - யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிபதி திருமதி எஸ். நந்த சேகரன் முன்நிலையில் சமாதான நீதவானாக பதவிப் பிரமாணம்.

2004 - ஊடக முதுகலைமாணி (எம்.ஏ) பட்டக் கல்வி இந்தியா மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.

2005 - 2008 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய கல்வி இணைப்பாளர் - ஊடக விரிவுரையாளர்.

2006 - ஊடக முதுதத்துவமாணி பட்டக்கல்வி (எம்.பில்) இந்தியா மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.

2007 - ஐ.ஈ.எல்.ரீ.எஸ். ஆங்கிலக் கல்வி.

2008 - 2011 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புலமைப்பரிசில் பெற்று இலண்டன் செபீட் கலாம் பல்கலைக் கழகத்தில் ஊடக கலாநிதிப் பட்ட ஆய்வுக்கல்வி.

2011 - ஊடக வருகை விரிவுரையாளர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் வளாகம் (ஆங்கில மொழி மூலம்)

2001 ஆம் ஆண்டு முதல் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரின் நிறுவன இயக்குனர்.

2001 - 2017 காலப்பகுதியில் 12 ஊடகவியல் நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றில் 08 நூல்கள் விருதுகளைப் பெற்றுள்ளது.

2013 - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியா கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையமாக பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மாற்றப்பட்டு ஊடக இளங்கலைமாணி (பி.ஏ) ஊடக முதுகலைமாணி (எம்.ஏ) மற்றும் பாடங்களுக்கான பட்டக் கல்வியை வழங்கினார்.

இதன் மூலம் 65 பட்டதாரிகள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா (ரீ.சி.என்.எல்) என்ற முதல் கத்தோலிக்க இணையத் தளத்தை (2011) நிறுவியது.

தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா (ரீ.சி.என்.எல்) தொலைக்காட்சி (2012) சேவையை (எல்.பி.என்.கேபிள் சேவை ஊடாக) நடத்தியது.

உதயன் பத்திரிகையில் 2015ஆம் ஆண்டு முதல் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் ஒரு கத்தோலிக்க சமய பக்கத்தை வெளியிட்டது. 2017ஆம் ஆண்டு முதல் காலைக்கதிர் பத்திரிகையில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் ஒரு கத்தோலிக்க பக்கத்தை வெளியிட்டது.

பாதுகாவலன் - வலம்புரி - உதயன் - காலைக்கதிர் - தினக்குரல் - வீரகேசரி போன்ற பத்திரிகைகளிலும் புதிய உலகம் - நான் - தொண்டன் - இறையியற் கோலங்கள் - வழிகாட்டி போன்ற சஞ்சிகைகளிலும் இவரின் நூற்றுக்கணக்கான ஆக்கங்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை - இந்தியா - அமெரிக்கா போன்ற நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளில் 09 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு மாநாட்டு மலரில் வெளியாகியுள்ளன.

**ஆண்டவரே பரிசுத்த குருக்களை நீர் தாரும் அருள் வாழ்வில் உம் குருக்கள் வாழ அருள் கூரும்- இறைமகனின் திருப்பணியைத் தொடர்ந்தெங்கும் ஆற்ற இருள் சூழ்ந்த உலகினிலே அருள் விளக்கை ஏற்ற வாழ்வளிக்கும் உண்மைகளை உலகிற்கு வழங்க வற்றாத பேரன்பின் ஊற்றாகத் திகழ...**



## சந்திரபோஸ் குரூஸ் அ.ம.தி. அடிகளார்

சந்திரபோஸ் குரூஸ் அ.ம.தி. அடிகளார் மன்னார் முள்ளிக்குளத்தில் திரு.சீமான் பிரான்ஸ் குறூஸ் திருமதி.லூக்காஸ் மரிய கறித்தாள் லம்பேட் ஆகியோரின் மகனாக 03 செப்ரெம்பர் 1959 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் தமது மெய்யியற் கல்வியை மட்டக்குளியாவில் கற்றார்.

1986 - 1988 பாசையூரில் யோண் பிரான்சீஸ் அ.ம.தி. அடிகளாருக்கு உதவிப் பங்குத் தந்தை.

1988 - 1990 மண்டைதீவு பங்குத் தந்தை.

1991 - 1992 சுண்டிக்குளி பங்கில் ஜே.பீ.இ. செல்வராஜா அடிகளாருக்கு உதவிப் பங்குத் தந்தை.

1993 - 1998 புதுக்குடியிருப்பு பங்குத் தந்தை.

1998 - 2000 உரோமாபுரி கிறகோறியன் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி

2001 - 2004 அக்கராயன் குளம் பங்குத் தந்தை.

2006 - 2011 திருநெல்வேலி - கோப்பாய் பங்குத் தந்தை.

2011 - கரம்பொன் பங்குத் தந்தை.

2012 - 2016 பெரியவிளான் பங்குத் தந்தை.

2006 - 2016 கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்.

2017 - 2018 வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆன்மீக குரு.

2018 - 2020 இலுப்பைக் குளம் பங்குத் தந்தை.

2020 - 2023 அமல மரித்தியாகிகள் சபை நிதி முகாமையாளர்.

08 ஆண்டுகள் அமலமரித் தியாகிகள் சபை மாகாண ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார்.

2023 முதல் இன்று வரை அரியாலை ஞான உதயம் இளையோர் திறன் விருத்தி மைய இயக்குநர்.



## தொம்மையப்பு இயேசுதாசன் சந்திரன் அடிகளார்

தொம்மையப்பு இயேசுதாசன் சந்திரன் அடிகளார் புதுக்குடியிருப்பு மாத்தளனில் திரு.தேவசகாயம்பிள்ளை தொம்மையப்பு திருமதி. செபஸ்தியாம்பிள்ளை ஞானம்மா தம்பதியினரின் மகனாக 10 நவம்பர் 1959ஆம் ஆண்டு பிறந்தார்.

மெய்யியல் கல்வி இந்தியா மதுரை புனித அருளானந்தா கல்லூரி.

1986 - 1987 மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத் தலத்தில் பிறின்ஸ் பஸ்தியாம்பிள்ளை அடிகளாருக்கு உதவிப் பங்குத் தந்தை.

1987 - 1988 லோறன்ஸ் சேவியர் அ.ம.தி.அடிகளாருக்கு உதவிப் பங்குத் தந்தையாகக் கரம்பொன் பங்கில் இருந்து கொண்டு கரம்பொன் நாரந்தனை புங்குடுதீவு பங்குகளில் பணி.

1988 - 1990 பங்குத் தந்தை நாரந்தனை - புங்குடுதீவுப் பங்குகள்.

1991 - 1992 தீவுப்பகுதி இடப்பெயர்வின் போது உடுவில் பங்கில் தங்கி இருந்து கொண்டு மானிப்பாய் பங்கில் அன்ரன் இராஜநாயகம் அடிகளாருடன் பணி.

1992 - பண்டத்தரிப்பு பெரியவிளான் பங்குத் தந்தை

1992 - 1994 புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் மற்றும் ஆரம்ப மெய்யியல் பிரிவுப் பொறுப்பாளர்.

1994 - 1997 மெய்யியல் முதுகலைமாணிப் பட்டக்கல்வி இந்தியா மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.

1997 - பிறெஞ்சு மொழிக் கல்வி இந்தியா சென்னை

1997 - 2000 பங்குத்தந்தை அரியாலை மற்றும் விரிவுரையாளர் புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி

2000 - 2003 பிரெஞ்சு மொழி டிப்ளோமாக் கல்வி பாரிஸ் பல்கலைக்கழகம் பிரான்ஸ்

2003 - 2007 பங்குத் தந்தை யாழ் சுண்டிக்குளிப் பங்கு.

2007 - 2009 பிறெஞ்சு மொழி இலக்கியத்தில் முதுகலைமாணி பட்டக் கல்வி இந்தியா மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.

2009 - 2011 பிரான்ஸ் நாட்டில் பிறெஞ் மொழி நேவேர்ஸ் பங்கின் உதவிப் பங்குத் தந்தை.

2011 - 2023 புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்.

2023 - 2026 பங்குத் தந்தை மண்டைதீவு.

2026 - புனித பிரான்சீஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்.


**வாழ்க குருத்துவம் - வளர்க குருத்துவம்.**

**குருத்துவம் ஒரு அர்ப்பண வாழ்வு. குருக்கள் தம்தாய் தந்தை - சகோதர சகோதரிகள்- உற்றார் உறவினர்கள்- தெரிந்தவர்கள் நண்பர்கள்- சொந்த ஊர் பங்குக் கோவில் என எல்லாரையும் எல்லாவற்றையும் அர்ப்பணித்து தனியே வெளியே வருகின்றமையால் எந்தப் பங்கில் பணியாற்றவும் எல்லா இறை மக்களையும் தன் பங்கு மக்களாக ஏற்கவும் தகுதி பெறுகின்றனர்.**

**பங்குகளில் தான் சந்திக்கும் குடும்பங்களின் குழப்பங்களைத் தனதாக்கி பங்கில் ஏற்படும் தனியான பொதுவான பிரச்சனைகளைத் தீர்க்க அன்றாடம் போராடி நிம்மதியற்ற மனதையும் நித்திரையற்ற இரவுகளையும் கடக்கின்றனர். பங்கின் மகிழ்வான நேரங்களில் மனமகிழ்ந்து குதூகலிக்கின்றனர். பங்கை விட்டு வெளியேறும் காலம் வந்தவுடன் அனைத்தையும் மறந்து அனைவரையும் அன்புடன் பிரிந்து பெட்டியைக் கட்டிக் கொண்டு நடந்த விடயங்களை அனுபவங்களாக்கிக் கொண்டு புதிய களம் நோக்கி புதுவேகத்துடன் நடக்கின்றனர். பழைய பங்கில் தாம் பட்ட துன்பங்களையும் இன்பங்களையும் பெரிதாகப் பகிரவும் விரும்பாமல் தம் மனதுகளிலே புதைத்து விடுகின்றனர்.**

**பழைய கத்தோலிக்க மக்கள் குருக்களை இறை பிரதிநிதிகளாக ஏற்றனர். மதித்தனர். அன்பு செய்தனர். இன்றைய நவீன யுகத்தில் சமூக ஊடக யுகத்தில் எல்லாமே மாறிவிட்டது. குருக்களும் காலத்திற்கு ஏற்ப வாழ முற்படுகின்றனர். இறைமக்கள் அவர்களின் வாழ்வை விமர்சிக்கவும் சமூக ஊடகங்களில் பகிரவும் தொடங்குகின்றனர். காலம் குருத்துவத்தை புனிதப்படுத்தவும் புதுமைப்படுத்தவும் இறைவனே துணை.**

**வாழ்க குருத்துவம் - வளர்க குருத்துவம்.** (C-5856)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# INVITATION FOR BID 2026/05
# VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI (Kollankaladdy)

1. The **Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy)** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
   **Above 5Mn works "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987.**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Bidding document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **2026.06.19 to 2026.07.03** in between 09:00 hrs. and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) T.P:021 224 1130, Fax:021 224 3688) from 09:00 hrs to 15:00 hrs. During the period from 2026.06.19 to 2026.07.03 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) on or before 10.30 a.m. at 2026.07.04** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy).** commencing at **10.30 AM on 2026.06.26**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2026-06-19 To 2026-07-03 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | 2026-06-26 at 10.30 AM | | | | |
| | Closing and Opening of Bids | | | 2026-07-04 at 10.30 AM | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(14)/05/03/549/Tour -01/2026 | Establishment of recreational activities, huts, Stone benches directional boards at Kankesanthurai Beach | 4.145 | 90 | C8, C7 and C6 (Building) | 3,000.00 | 42,000.00 | 22/08/2026 | 19/09/2026 |
| NP/14/41(14)/05/01/550/CF-18/2026 | Reconstruction of Saavakkadavai Veethy & Iraachahariya Veethy at Myliddy | 7.825 | 90 | C8, C7 and C6 (Highway) | 3,000.00 | 79,000.00 | 19/09/2026 | 17/10/2026 |
| NP/14/41(14)/05/01/551/CF-19/2026 | Reconstruction of Neeraviyadi Senarvely Veethy at Palaly North | 6.702 | 90 | C8, C7 and C6 (Highway) | 3,000.00 | 68,000.00 | 19/09/2026 | 17/10/2026 |
| NP/14/41(14)/05/01/552/CF-20/2026 | Reconstruction of Pillaiyaar Veethy at Palaly South | 4.819 | 90 | C8, C7 and C6 (Highway) | 3,000.00 | 49,000.00 | 22/08/2026 | 19/09/2026 |
| NP/14/41(14)/05/01/553/CF-21/2026 | Reconstruction of Veemankamam Madaththady Cross Roads | 6.910 | 90 | C8, C7 and C6 (Highway) | 3,000.00 | 70,000.00 | 19/09/2026 | 17/10/2026 |
| NP/14/41(14)/05/01/554/CF-22/2026 | Reconstruction of Anguduvanai Road at Kollankaladdy | 4.745 | 90 | C8, C7 and C6 (Highway) | 3,000.00 | 48,000.00 | 22/08/2026 | 19/09/2026 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Kankesanthurai(Kollankaladdy).**
**19.06.2026**

(C-3860)

## யாழ். பல்கலை கிளிநொச்சி வளாக விவசாய பீட நுழைவாயில் திறப்பு





(தருமபுரம்)

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீடத்திற்கான நுழைவாயில் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றைய தினம் விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் கந்தையா பகீரதன் தலைமையில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொண்டு குறித்த நுழை வாயிலை திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் விவசாய பீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.(8- 316)

## 9 அத்தியாவசிய பொருட்களின்
# விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் ஊடாக விற்பனை செய்யப்படும் 9 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, பொன்னி சம்பா அரிசி, சிவப்பு பச்சை சம்பா அரிசி, உள் நாட்டு சம்பா அரிசி, உள் நாட்டு வெள்ளை நாட்டு அரிசி, வெள்ளை பச்சை அரிசி, வெள்ளை பச்சை சம்பா அரிசி, கோதுமை மா, கொண்டைக்கடலை, சீனி ஆகிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. (நி)

## 3கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான
# சிகரெட்டுக்களுடன் சீனர் கைது

(கொழும்பு)

சுமார் 3 கோடியே 18 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்த முயன்ற 13 வெளிநாட்டு பயணிகள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் அனைவரும் சீன நாட்டு வணிகர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 4 மணியளவில், மலேசியாவின் கோலாலம்பூர் நகரிலிருந்து மலேசிய ஏர்லைன்ஸ்க்குச் சொந்தமான ஆர்-179 என்ற விமானம் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

சந்தேகநபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தின் ஊடாக இந்த சிகரெட் தொகையை கடத்திச் செல்ல முயன்ற போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து, சீனாவில் தயாரிக்கப்பட்ட 212,600 சிகரெட்டுகளை உள்ளடக்கிய 1,063 சிகரெட் கார்ட்டூன்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகள் மற்றும் தேயிலை அடங்கிய பெட்டிகளுக்குள் இந்த சிகரெட்டுகள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்ட சீன வணிகர்கள் 13 பேரையும் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தமது பொறுப்பில் வைத்து, இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிளி.பொருளாதார மத்திய நிலையத்தின் குறைபாடுகளை சீர் செய்து தாருங்கள்

## வியாபாரிகள், பொதுமக்கள் கூட்டாக கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விசேட பொருளாதார மத்திய நிலையம் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருவதாகவும் அதனை நிவர்த்தி செய்து தருமாறு பொது மக்களும் வியாபாரிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையமானது கடந்த 2017 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டது.

இருப்பினும் பல்வேறு காரணங்களினால் குறித்த நிலையத்தில் 4 கடைகள் மட்டுமே இயங்கி வந்த நிலையில் மீண்டும் பொருளாதார மத்திய நிலையம் புதிதாக மீள்இயக்கம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.


இந்நிலையில், இரவு நேரங்களில் காவலாளி இல்லாமை, மின்சார இணைப்பு இல்லாமை, மலசல கூடங்களுக்கான நீர்வசதி இல்லாமை, கழிவுகளை அகற்றுவதில் இடர்பாடு போன்ற பல குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றமையினை வியாபாரிகளும் பொதுமக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கான நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (8-271)




SLASSCOM நிறுவனம் நடத்திய புத்தாக்கப் போட்டியில் SLIIT Northern Uni மாணவர்களுக்கு புத்தாக்கத்துக்கான விருது வழங்கப்பட்டுள்ளது. சிறந்த புத்தாக்கத்திற்கான விருதினை 4 ஆம் வருட தகவல் தொழில்நுட்ப மாணவர்களான தேனுஜன், மிதுஜனா, யதுட்சன், சகிசன் ஆகிய மாணவர்கள் பெற்றுள்ளனர்.

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் சர்வதேச யோகா தின நிகழ்வுகள்



(நெளுக்குளம்)

இந்தியத் துணைத் தூதரகமும் இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரியும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச யோகா தின நிகழ்வு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 1600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு யோகாப் பயிற்சிகளை யோகா, சிலம்பம், கராத்தே மற்றும் வர்மக்கலை ஆசிரியர் ஜெயம் ஜெகன் வழங்கினார். நிகழ்வில் யோகாப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி சர்வதேச சாதனையாளர் சி. அகிலத்திருநாயகி, இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (8-299)



# சூழலைப் பேணுவோம்



முனைவர்
ச.மனோன்மணி

## வெள்ளி நற்சிந்தனை 34

மனிதர் வாழும் சூழலைப் பற்றிப் பல ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழர் பண்பாட்டில் சூழல்பற்றிய கருத்துகள் ஆழமாகவே பதியப்பட்டிருந்தது. அக்கால மக்களின் வாழ்வியல் நடைமுறைகள் இயற்கையோடு நன்கு இணைந்திருந்தன. அதனால் இயற்கைச் சூழல் பற்றிய கருத்து மக்களிடம் தெளிவாக இருந்தது.

பண்டைய தமிழிலக்கியங்களில் இதற்கான சான்றுகள் பல உள்ளன. மக்கள் வாழும் நிலப்பரப்பு விளைபொருள்களுக்கு ஏற்பப் பாகுபாடு செய்யப்பட்டிருந்தது. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்களில் மக்களுடைய வாழ்வியல் எவ்வாறிருந்தது என்பதை இலக்கியப் பதிவுகள் விரிவாகவே விளக்கியுள்ளன. வீட்டுச் சூழல், சமூகச்சூழல், நாட்டுச் சூழல் என்ற மூன்று தளங்களின் நிலையை இன்றும் காணக் கூடியவகையில் பாடங்கள் புனையப்பட்டுள்ளன.

நாம் வாழும் சூழல் எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதில் பண்டைத்தமிழர் முனைப்பாகவே இருந்துள்ளனர். அதனால் பாடல்களில் சூழல் மாசு பற்றிய குறிப்புகளைக் காணமுடியவில்லை. மரங்கள், புல், பூண்டு, செடி, கொடி என்பவற்றின் பரவல் மனித வாழ்வுக்கு இடையூறு செய்யவில்லை. வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருக்கும் பண்பாட்டுப் பயிற்சி சிறப்பாகப் பின்னவருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. நெடும் பாடல்கள் இதற்குச் சான்றாகவுள்ளன.



சூழல் மாசடைவதால் பல சிக்கல்கள் ஏற்படும். நோய்த் தொற்று, விளை பொருள் அழிவு என்பன ஏற்படும். குறிப்பாக நீர்நிலைகள் மாசடைவது தவிர்க்கப்பட வேண்டும். குளம், குட்டைகளில் தேங்கி நிற்கும் நீரில் வேண்டாத குப்பைகளைப் போடக்கூடாது. அங்கு கிருமிகள் பெருகிச் சூழலையே மாசுபடுத்திவிடும். உயர்ந்து வளர்ந்த பெரிய மரங்களை உரிய காலத்தில் வெட்டி ஒழுங்காக வளர விட வேண்டும். காட்டுமரங்களை வெட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். நீர்வளத்திற்கு மழை பெய்ய வேண்டும் . மழை பெய்தால் மண் வளம் பெருகும். பயிர்ச் செய்கை நிலங்களுக்கு நீர் பாய்ச்ச ஏற்ற வாய்க்கால்களை உரியமுறையில் அமைக்க வேண்டும். மழை இல்லாத வரண்ட காலத்திலே பெரிய நீர் பாயும் வாய்க்கால்களைத் துப்புரவு செய்ய வேண்டும். அப்போது தான் மழை நீர் வாய்க்கால் வழியே ஒழுங்காக ஓடிச் செல்லும். வெள்ளப் பெருக்கை இதன்மூலம் தடுக்கலாம்.

கழிவகற்றல் ஏற்றமுறையில் நடைபெறாது விட்டாலும் சூழல் மாசடையும். குறிப்பாகத் துர்நாற்றம் தரும் கழிவுகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும். விலங்குகளின் எச்சங்கள் பயிர்ச் செய்கைக்கு எருவாகப் பயன்படுவதால் அவற்றைத் தனியாக ஓரிடத்தில் சேர்த்து வைத்துப் பயன்படுத்தலாம்.

வீட்டுச் சூழலில் உள்ள மாசை அகற்ற, முற்காலத்தில் எளிமையான நடைமுறை பேணப்பட்டது. வீட்டினுள்ளே மஞ்சள் பொடியைக் கரைத்துத் தெளிப்பர். வெளிப்புறத்திலே பசுவின் சாணத்தைக் கரைத்துத் தெளிப்பர். மஞ்சளும் பசுவின் சாணமும் சிறந்த கிருமிநாசினிகளாக இன்றும் தமிழர் பண்பாட்டில் உள்ளன.

இன்று விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளாகப் பல செயற்கையான கிருமிநாசினிகள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றால் புறவிளைவுகளும் ஏற்படுகின்றன. பொறிகளின் பயன்பாட்டாலும் இன்று விரைவில் சூழல் மாசடைகிறது. நிறைய வாகனங்கள் தெருவிலே செல்வதால் தூசியும் புகையும் எங்கும் பரவி நிற்கின்றன. இவற்றை விட அவை செல்லும் போது ஏற்படும் ஒலியால் சூழலின் அமைதி கெடுகிறது. இரவில் பலரது உறக்கம் கெடுகிறது. மேலும் கட்டடங்கள் மிக நெருக்கமாகவும் உயரமாகவும் தற்போது கட்டப்படுகின்றன. அதனால் தூய்மையான காற்றோட்டம் தடை செய்யப்படுகிறது.

நகரங்கள் எல்லாம் கட்டடக் காடாகவே காட்சி தருகின்றன. இந்த அமைப்பு மனிதர் உடல் நலத்தையும் உளநலத்தையும் சீர் கெட வைக்கிறது. மருத்துவமனைகளும் சிறுவர் காப்பகங்களும் சூழல் மாசடைவதால் சீர்குலைந்துள்ளன.

எனவே உடனடியாகச் சூழல் மாசு அடைவதைத் தடுக்க் ஆவன செய்ய வேண்டும். வேறுபட்ட காலநிலை, வேறுபட்ட பண்பாடு கொண்ட நாடுகளில் அந்தந்த நாட்டிற்கு ஏற்றவகையில் செயற்றிட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இளைய தலைமுறையினர் சூழல் மாசடைவதை உற்று நோக்காமல் வாழ்கின்றனர். அவர்கள் முதுமையடையும் போது நலமாக வாழ வேண்டுமாயின் இப்போது இதுபற்றி எண்ணி விரைவாகச் செயற்படவேண்டும் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வலிமையும் வீரமும் மிக்கவர்களின் ஆயுதம் அகிம்சை. - மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## செம்மணி மனிதப் புதைகுழியை சிங்கள மக்கள் அறிய வேண்டும்

நம் நாட்டில் யுத்தம் நடந்து கொண்டிருந்த போது அதன் காரணம் குறித்தும் விளைவுகள் குறித்தும் ஆய்வு செய்த சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்று தனது அறிக்கையில், இலங்கையில் பத்திரிகைப் பயங்கரவாதமே உள்ளது எனக் குறிப்பிட்டிருந்தது.

அதாவது இலங்கையில் சிங்கள தமிழ் இனங்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதற்கும் சமாதானம் ஏற்படுவதைத் தடுப்பதிலும் பத்திரிகைகள் கடும் பங்காற்றியுள்ளன என்பது குறித்த சர்வதேச தொண்டு நிறுவனத்தின் முடிவு.

ஆம், சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகள் சொல்லும் தரமன்று.

இராணுவ முகாம்களிலிருந்து பொதுமக்கள் குடியிருக்கும் பகுதிகளில் எறிகணைத் தாக்குதல்களை நடத்துவதும் போர் விமானங்கள் தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டுகளைப் போட்டு விட்டு விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிப்பதும் அதனைச் சிங்களப் பத்திரிகைகள் இன வன்மத்துடன் செய்தி ஆக்குவதும் வழமையாகியது.

அந்நிலைமை தமிழர்களுக்கு எதிரான மனநிலையை சிங்கள மக்களிடையே ஏற்படுத்தியது. உண்மையில் படைத்தரப்பினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்கள் அப்பாவித் தமிழ் மக்கள். ஆனால் அந்த உண்மையை சிங்கள ஊடகங்கள் ஒருபோதும் சிங்கள மக்களிடம் வெளிப்படுத்தவில்லை.

எனினும் எவ்வளவோ அழிவுகளின் மத்தியில் இப்போது நாடு சமாதானம் பற்றிச் சிந்திக்கின்ற கட்டத்துக்கு வந்துள்ளது. ஆயினும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இன்னமும் நிவாரணம் கிடைக்கப் பெறவில்லை.

அதிலும் குறிப்பாக, வன்னி யுத்தத்தின் போது நடந்த தமிழின அழிப்பு மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன? என்பன தொடர்பில் இன்னமும் தமிழ் மக்கள் ஆற்றொணாத் துன்பத்துடன் வாழ்கின்றனர்.

இருந்தும் தமிழ் மக்களின் அவலங்களை சிங்கள மக்கள் எந்தளவு தூரம் அறிந்துள்ளனர் என்பது இன்னமும் கேள்விக்குரியதே.

ஆம், இப்போது செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து 350 க்கும் மேற்பட்ட மனித என்புத் தொகுதிகள் கூட்டாகவும் தனித்தும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இந்தத் தகவல்களை சிங்கள ஊடகங்கள் மற்றும் சிங்கள சமூக வலைத்தளங்கள் சிங்கள மக்களிடம் சேர்ப்பித்தனவா என்றால் இல்லை என்பதே அதற்கான பதில்.

கூடவே செம்மணி மனிதப் புதைகுழியின் கொடூரத்தை நம் தமிழ்த் தரப்புகளேனும் சிங்கள மக்களிடம், அவர்களின் மொழியில் தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்தனவா என்றால், அதற்கும் இல்லை என்பதே பதில்.

எனவே தயவுசெய்து செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து எடுக்கப்படுகின்ற மனித என்புத் தொகுதிகள் பற்றி அனைத்து ஊடகங்களும் சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இது விடயத்தில் தமிழ்த் தரப்புகளும் விசேட செயன்முறைகளைக் கையாண்டு எங்களின் அவலத்தை – செம்மணியின் துயரத்தை சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இஃது சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்குக் கட்டாயமானதாகும்.

# செம்மணியை விடப் பெரிய மனிதப் புதைகுழி வட்டுவாகல் விகாரைக்குக் கீழே உள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பகிரங்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - வட்டுவாகல் விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், இந்தச் செம்மணியை விடவும் பல மடங்கு பெரியதொரு மனிதப் புதைகுழி அடையாளம் காணப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது இனத்தை வன்முறையாக அழித்தமைக்கான அசைக்க முடியாத சாட்சிகள், இயற்கையின் நீதியால் தற்போது ஒவ்வொன்றாக வெளியே வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

செம்மணியில் தற்போதைய அகழ்வுகளின் மூலம் வெளிவரும் உண்மைகள் உலகத்தையே உலுக்கியுள்ளன. தமிழர் தாயகப் பகுதிகளில் இன்னும் எத்தனையோ இடங்களில் இவ்வாறான மனிதப் புதைகுழிகள் இரகசியமாக மூடிமறைக்கப்பட்டுள்ளன.

அவற்றை முறையாகத் தோண்டத் தொடங்கினால், இன்னும் பேரதிர்ச்சியைத் தரும் வகையிலான மனித என்புக் குவியல்கள் தொடர்ச்சியாகக் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

குறிப்பாக முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், செம்மணியை விட மிகப்பெரியதொரு மனிதப் புதைகுழி வெளிச்சத்துக்கு வரும். இதற்காக அந்த விகாரையை உடைத்துத்தான் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதில்லை. தற்கால நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி, 'ஸ்கான்' செய்வதன் மூலமே அங்கு நிலத்தடியில் எத்தனை ஆயிரக்கணக்கான என்புத் தொகுதிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பதைத் துல்லியமாக ஆராய்ந்து அறிய முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான இடங்களில் அப்பாவிப் பொது மக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு, கூட்டங்கூட்டமாகப் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். சந்தேகத்துக்குரிய அந்த மனிதப் புதைகுழிகள் அனைத்தும் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் முழுமையாகத் தோண்டப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இந்த விவகாரத்தில் சர்வதேச சமூகம் நேரடியாகத் தலையிட்டு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் பாரபட்சமற்ற நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்பதே எங்களின் பிரதான எதிர்பார்ப்பாகும் என்றார். *(ம-7)*

# அறுவரின் உடலில் தங்கம் இருவரின் உடைமையில் தங்கம்

## எண்மருக்கும் மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவிற்கு தங்கம் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 08 பேரையும் எதிர்வரும் திங்கட்கிழமை வரையில் சுங்க திணைக்கள அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் வைத்து விசாரணை செய்ய மல்லாகம் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

காங்கேசன்துறையில் இருந்து நாகப்பட்டினத்திற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை பயணிக்க இருந்த பயணிகளில் இந்தியப் பிரஜைகளான இருவரின் உடைமையில் இருந்து தலா 100 கிராம் தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பயணிகளைச் சோதனைக்குட்படுத்திய வேளை சந்தேகத்திற்கிடமான 26 பயணிகளை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 26 பேரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த சுங்க திணைக்கள அதிகாரிகள் 26 பேரையும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று ஸ்கான் செய்தனர்.

அதன்போது 06 பேரின் உடலினுள் தங்கக் கட்டிகள் காணப்பட்டுள்ளன.

அதனையடுத்து 06 பேரையும் தமது காவலில் எடுத்த சுங்கத் திணைக்கள அதிகாரிகள், ஏனைய 20 பேரையும் விசாரணைகளின் பின்னர் விடுவித்தனர்.

இந்நிலையில் தங்கக் கட்டிகளை தமது உடைமையில் வைத்திருந்த இருவரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று வியாழக்கிழமை முற்படுத்திய சுங்கத் திணைக்கள அதிகாரிகள், இருவரையும் வைத்தியசாலையில் உள்ள ஆறு பேரையும் எதிர்வரும் திங்கட்கிழமை வரையில் தமது காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றில் அனுமதி கோரிய நிலையில், நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது. *(ம-7,33)*

# அமெரிக்காவின் 12.5% புதிய வர்த்தக வரியை தவிர்க்க வியூகம் வகுக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

அமெரிக்காவினால் முன்மொழியப்பட்டுள்ள 12.5 சதவீத புதிய வர்த்தக வரியைத் தவிர்ப்பதற்காக, தற்போதைய தொழிலாளர் மற்றும் சுங்க நடைமுறைகளை வலுப்படுத்த அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலொன்றின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

அமெரிக்கா இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக இருப்பதுடன், முக்கியமாக ஆடை ஏற்றுமதி மூலம் ஆண்டுதோறும் சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தகம் மேற்கொள்ளப்படுகிறது.

முன்மொழியப்பட்டுள்ள புதிய அமெரிக்க வரி முறையின் கீழ், சுமார் 60 நாடுகளுக்கு 12.5 சதவீதம் வரை வரி விதிக்க முன்மொழியப்பட்டுள்ளதுடன், அந்தப் பட்டியலில் இலங்கையும் உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் ஆடைத் தொழில் கடந்த ஆண்டு 5 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருவாயை ஈட்டியுள்ளதுடன், இத்துறையில் சுமார் 3 இலட்சம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

எனவே கட்டாய உழைப்பு தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளினால் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக, சுங்கப் பரிசோதனை முறைகள் மேம்படுத்தப்படும்.

அத்துடன் வன்முறை மற்றும் துன்புறுத்தல்கள் அற்ற பணிச்சூழலில் வேலை செய்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) C190 உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தவும் இலங்கை நடவடிக்கை எடுக்கும்.

இது தொடர்பாக அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகத்துடன் (USTR) பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றார்.

ஜூன் 03ஆம் திகதி, இலங்கை உள்ளிட்ட 60 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதம் முதல் 12.5 சதவீதம் வரை கூடுதல் இறக்குமதி வரி விதிக்க அமெரிக்க நிர்வாகம் முன்மொழிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வட மாகாண சுற்றுலாத்துறை விருதுகள்- 2025/2026

➢ வடமாகாணச் சுற்றுலாவின் மேன்மையைக் கொண்டாடுதல் **(Celebrating Excellence in Tourism of the Northern Province )**

பிராந்திய சுற்றுலாத்துறையின் தரத்தையும் வளர்ச்சியையும் முன்னெடுக்கும் விதத்திலமைந்த விசேஷமான பங்களிப்புக்களை கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாண சுற்றுலாப்பணியகமானது வடக்கு மாகாண சுற்றுலா விருதுகள் 2025-2026 இற்கான விண்ணப்பங்களைப் பெருமையுடன் கோருகின்றது. இவ் விருதுகள் வடமாகாணத்தின் சுற்றுலா வளர்ச்சி, தரம் மற்றும் சேவைக்கு சிறப்பாக பங்களித்தவர்களை கௌரவிக்கும் விதமாக வழங்கப்படுகின்றது.

➢ விருது பிரிவுகள் **(Award Categories)**

1. **வடக்கு மாகாணத்தின் சிறந்த சுற்றுலா வழிகாட்டி விருது ( Best Area Tour Guide - Northern Province)** (ஆண்,பெண்)

மாகாணத்தின் பண்பாடு, பாரம்பரியம்,அழகு இவற்றைச் சிறப்பாக எடுத்தியம்பும் அதி சிறப்பான சுற்றுலா வழிகாட்டிகளுக்கான அங்கீகாரம்.

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் :-
- குறைந்த பட்சம் இரண்டு (2) ஆண்டுகள் வட மாகாணத்தில் சுற்றுலா வழிகாட்டியாகப் பணிபுரிந்திருக்க வேண்டும்.
- குறைந்தது பத்து (10) சுற்றுப்பயணங்களை மாகாணத்திற்குள் நடாத்தியிருக்க வேண்டும்.

2. **வடக்கு மாகாணத்தின் சிறந்த தங்குமிட வழங்குநர் விருது ( Best Accommodation Service Provider - Northern Province )**

வடமாகாணத்தில் தங்குமிடச் சேவை வழங்குநரிடையே உயர்தரமான விருந்தோம்பல் மற்றும் தங்குமிட சேவைகளை வழங்குவோரை கௌரவித்தல்

விருதுப் பிரிவுகள்
- Hotel - ஹோட்டல்
- Guest House - விருந்தினர் விடுதி
- Bungalow - விருந்தினர் மாளிகை
- Home Stay - வீடுகளில் தங்குமிடங்களை வழங்குவோர்
- Camping Site - முகாமிடல்

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வட மாகாணத்தில் அமைந்த தங்குமிட சேவை வழங்குநராக இருக்க வேண்டும்.
- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது பதிவு செய்ய விண்ணப்பித்திருக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் ஒரு (1) வருடம் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டிருக்க வேண்டும்.
- உள்ளூராட்சி சபையில் செல்லுபடியாகும் பதிவைப் பெற்றிருக்க வேண்டும்.
- கடந்த வருடத்தில் முந்திய ஆண்டில் குறைந்தது 100 விருந்தினர் இரவுகளைப் பதிவு செய்திருக்க வேண்டும்.
- கடந்த 12 மாதங்களில் பாரிய முறைப்பாடு அல்லது விதி மீறல் தொடர்பான பதிவுகள் இல்லாமல் இருக்க வேண்டும்

3. **வடக்கு மாகாணத்தில் சிறந்த நலன்சார் சுற்றுலாச் சேவை (Wellness Tourism - Northern Province)** வழங்குநர் விருது

ஆரோக்கியம், புத்துணர்ச்சி மற்றும் பரிபூரண நலன் ஆகியவற்றை முன்னெடுத்தலில் சிறந்து விளங்குவோரைக் கொண்டாடுதல்.

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வடக்கு மாகாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் நலன்சார் சுற்றுலா நிறுவனமாக இருக்க வேண்டும். (உ-ம் Spa , அரச மருத்துவ நிலையங்கள், யோகா மையங்கள், ஆரோக்கிய மையங்கள் Wellness Centre)
- குறைந்தபட்சம் 12 மாதங்கள் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டிருக்க வேண்டும்.
- உள்ளூர் அல்லது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை வழங்குநராக இருக்க வேண்டும்.
- சுகாதாரம், அளிக்கப்படும் சேவைகள் முதலியனவும் சேவையாளர்களும் அங்கீகரிக்கப்பட்ட, சுகாதார, பாதுகாப்பு மற்றும் தொழில்முறை தரச்சட்டங்களுக்கேற்ப காணப்பட வேண்டும். (உ-ம்: உரிமம் பெற்ற ஆயுர்வேத வைத்தியர்கள், பயிற்றப்பட்ட சிகிச்சை வழங்குநர்கள்,சான்றளிக்கப்பட்ட யோகா ஆசிரியர்கள்)

4. **வடக்கு மாகாணத்தின் சிறந்த உணவு மற்றும் பானத்திற்கான சுற்றுலா விருதுகள் (Best traditional food and Beverages Provider – Northern Province)**

பிரிவு 1: வடக்கு மாகாணத்தின் சிறந்த பாரம்பரிய உணவு வழங்குநர் விருது **Best Traditional Cuisine Provider**

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வடமாகாணத்தில் இயங்கும் நிறுவனமாக இருக்க வேண்டும்.
- பிரதானமாக பாரம்பரிய வடக்கு உணவுகளை வழங்க வேண்டும். (உ-ம் -ஒடியல்கூழ், யாழ்நண்டு குழம்பு, பிட்டு, வடை, தோசை, பனங்கிழங்கு சார்ந்த உணவுகள்)
- உள்ளூர் மூலப் பொருட்கள் மற்றும் பாரம்பரிய சமையல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.
- உணவகம், Home stay, விருந்துமனை, உணவுக்கடை அல்லது உணவு/பான வழங்கல் சேவை (Catering Services ) ஆகியனவாக இருக்கலாம்.

பிரிவு 2: பிற (சர்வதேச கலப்பு) உணவு வழங்குநர் விருது **(Best Others – International or mixed Cuisine Provider)**

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வடக்கு மாகாணத்தில் இயங்க வேண்டும்.
- சர்வதேச அல்லது கலப்பு வகை உணவுகள் வழங்கப்பட வேண்டும்.
- உணவகம், கஃபே, பேக்கரி அல்லது நடமாடும் உணவு வண்டி ஆகியவையாக இருக்கலாம்.

பிரிவு 3: சிறந்த பழச்சாறு/பானங்கள் **(Best fresh Juice or Mocktail Provider)**

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வடக்கு மாகாணத்தில் இயங்க வேண்டும்.
- உள்ளூர் பழங்கள்/மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பானங்களை வழங்க வேண்டும். (உ-ம்: பனம்பழ பானம், நெல்லி, இளநீர்,பழப்பானங்கள்)
- சுகாதார மற்றும் சிறந்த சீரமைப்புத் தரத்தைப் பின்பற்ற வேண்டும்.

5. **வடக்கு மாகாணத்தின் சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஒழுங்கமைப்பாளர் விருது (In bound tour operator - Northern Province)**

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு சுற்றுலா நிறுவனம் ஆக இருக்க வேண்டும்.
- கடந்த 12 மாதங்களில் குறைந்தது 10 உள்நாட்டு குழு அல்லது தனிநபர் சுற்றுப் பயணங்களை வடக்கு மாகாணத்திற்கு நடத்தியிருக்க வேண்டும்.
- உள்ளூர் சேவை வழங்குநர்களுடன் (வழிகாட்டிகள், ஹோட்டல்கள், போக்குவரத்து, சமூகங்கள்) இணைந்து செயற்பட வேண்டும்.
- கடந்த 12 மாதங்களில் எந்த முக்கிய முறைப்பாடுகளும் இல்லாது இருக்கவேண்டும்.

6. **வடமாகாணத்தின் சிறந்த போக்குவரத்து சேவை வழங்குநர் (முச்சக்கர வண்டி - மகிழுந்து ) விருது- (Best transport service Provider - Northern Province (Three wheel /Taxi))**

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வடக்கு மாகாணத்தில் பிரதானமாக இயங்க வேண்டும்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் மற்றும் போக்குவரத்து அனுமதி பெற்றிருக்க வேண்டும்.
- வாகனம் பதிவு செய்யப்பட்டு காப்பீடு செய்யப்பட்டு நன்றாக பராமரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.
- கடந்த 12 மாதங்களில் உள்ளூர் அல்லது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை வழங்கியிருக்க வேண்டும்.
- புகார், தவறான கட்டணம் அல்லது ஒழுங்கு மீறல் இல்லாமல் இருக்க வேண்டும் அல்லது வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது விரும்பத்தக்கது.

7. **வடமாகாணத்தின் சிறந்த சூழல் நட்புறவான நினைவுப் பொருட்களை உருவாக்கும் தொழில்முனைவோருக்கான விருது. ( Best Eco-friendly entrepreneur – Souvenir Maker - Northern Province)**

உள்ளூர் பொருட்களால், சுற்றுச்சூழல் நட்புறவாக நினைவுப் பொருட்களை உருவாக்கும் படைப்பாற்றல் மிக்க தொழில்முனைவோருக்கான விருது.

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வடக்கு மாகாணத்தில் வசிப்பவராகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட தொழிலாகவோ இருக்க வேண்டும்
- மறுசுழற்சி செய்யக்கூடிய அல்லது சூழல் நட்புறவான பொருட்களைப் பயன்படுத்தி தயாரிப்புக்களை உருவாக்க வேண்டும். (இறக்குமதி பொருட்கள் அல்ல)
- குறைந்தது 12 மாதங்கள் இயங்கியிருக்க வேண்டும்.
- நிலைபேறான உற்பத்திப் பொறிமுறைகள் இருக்க வேண்டும்.
- சிறுவர் தொழில், கலாசார துஷ்பிரயோகம் அல்லது ஆபத்தான பொருட்கள் பயன்பாடு என்பவை இடம்பெறாது இருக்க வேண்டும்.

8. **வடக்கு மாகாணத்தின் சிறந்த நினைவுப் பொருள் தொழில்முனைவோர் விருது. ( Best Souvenir Maker - Northern Province)**

உள்ளூர் கைவினை மற்றும் நினைவுப் பொருள் உற்பத்தியில் சிறந்து விளங்கும் தொழில்முனைவோரை கௌரவிப்பதற்கான விருது

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்முனைவோராக இருக்க வேண்டும்.
- குறைந்தது இரண்டு (2) ஆண்டுகள் தொழிலை நடாத்திவர வேண்டும்.
- தயாரிப்புகள் வடமாகாணத்தில் தயாரிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும்.
- சட்டபூர்வமான மற்றும் நெறிமுறைப்படி பதிவு செய்யப்பட்ட தொழிலாக இருக்க வேண்டும்.

9. **வடக்கு மாகாணத்தின் சிறந்த அனுபவம் பகிரும் தொழில்முனைவோர் விருது (Best experience sharing entrepreneur in tourism sector - Northern Province )**

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வடமாகாணத்தில் இயங்கும் தொழிலாக இருக்க வேண்டும்.
- குறைந்தது இரண்டு (2) ஆண்டுகள் தொடர்ச்சியாக சுற்றுலா அனுபவங்களை வழங்கி வர வேண்டும்.

10. **வடக்கு மாகாணத்தின் சிறந்த சுற்றுலாத்தல முகாமைத்துவத்தினை வழங்கும் உள்ளூர் அதிகாரசபை (Best tourism managing Local Authority - Northern Province )**

சுற்றுலாத்தலங்களை நிலையான, பாதுகாப்பான, மற்றும் ஈர்க்கக்கூடிய இடங்களாக மாற்றியுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளைக் கௌரவித்தல்.

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:
- வடக்கு மாகாண மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபையாக இருக்க வேண்டும்.
- குறைந்தது இரண்டு (2) ஆண்டுகள் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.
- சுற்றுச்சூழல், நிதி மற்றும் நிர்வாக விதிமுறைகளை நிரூபிக்கும் ஆவணங்கள் (அறிக்கைகள், புகைப்படங்கள், சாட்சிகள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

✍ விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசிநாள்: 15.08.2026

✍ விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள- A9 வீதி,சுற்றுலாப்பணியகம், வடக்கு மாகாணம்.அல்லது அதிகாரபூர்வ இணையத்தளம் - **tourismnorth.lk** இனை நாடவும்.

✍ தொடர்புகளுக்கு : 021 221 7311

✍ மின்னஞ்சல் : **tourismnorth.srilanka@gmail.com**

**"வடக்குமாகாணத்தை சிறந்த சுற்றுலாப் பிராந்தியமாக மாற்றியமைக்க பங்களிப்பு செய்வோரை நாம் கௌரவிப்போம் "**

(C-5859)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இனப்படுகொலை...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் மற்றும் அங்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மனித எச்சங்கள் குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"செம்மணி மனிதப் புதைகுழியில் மிகக் குறுகிய நாட்களுக்குள் 380 மனித என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை வரலாற்றிலேயே மிக அதிகப்படியான மனிதப் பேரவலம் அரங்கேறிய ஒரேயொரு புதைகுழியாகவும், தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கான நேரடிச் சாட்சியமாகவும் இந்தச் செம்மணித் தளம் இன்று மாறியுள்ளது.

இங்கு இன்னும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் என்புத் தொகுதிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனப் பலராலும் எதிர்பார்க்கப் படுகின்றது.

அந்தவகையில், உலகத்தினுடைய மனச்சாட்சியையே உலுக்கிக் கிளறிவிடுகின்ற ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த களமாக இந்தச் செம்மணி மனிதப் புதைகுழி அமையப் போகிறது. சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் உடனடியாகத் தங்களின் மேலான கரிசனையைச் செலுத்த வேண்டும் என்றார். (ம-7)

## வவுனியா நோக்கி...

கிப் பயணித்த இலங்கை போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று, மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியை, பேருந்தின் பின் சக்கரத்தில் சிக்கி இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் பூனாவை, கல்கந்தேகம வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றிய 56 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பூனாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கோட்டாவின்...

எதிர்வரும் 24ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைவாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் மேலதிக பரிசீலனையை எதிர்வரும் 24ஆம் திகதி வரை ஒத்தி வைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## அபிவிருத்திக்...

மான எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தலைமையில் குறித்த கூட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது தெல்லிப்பழை வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மற்றும் வைத்தியசாலை ஆகியவற்றை மத்திய அரசின் கீழ் கொண்டு வந்து அதனை மேம்படுத்தி மக்களுக்கு சேவை வழங்குவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் தையிட்டி விகாரை, போக்குவரத்து விடயங்கள், காணிகளை விடுவித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட் டன.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இருவருக்கும் இடையில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை தொடர்பில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

அத்துடன் தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்ற விடயத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் இராமநாதன் அர்ச்சுனா ஆகியோருக்கு இடையிலும் பலத்த வாக்குவாதங்கள் இடம்... (ம-7)

## கோட்டாபய...

திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு அரச நிறுவனங்களில் இருந்து சம்பளம் பெற்றுக்கொண்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு அமைவாக, நேற்று (18) காலை அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சுகீஸ்வர பண்டார 2022ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலாளர்களில் ஒருவராகப் பணியாற்றியுள்ளதுடன், அதே காலப்பகுதியில் அன்றைய ஜனாதிபதி செயலகத்தின் திட்டப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது. (ம-7)

## அரியாலையில்...

இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சடலம் யாழ். புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அங்கு சென்ற யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவுறுத்தினர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,60)

## ஈஸ்டர்..

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை சுதந்திரமாக முன்னெடுக்கப்பட வேண்டும்" என்பதை வலியுறுத்தியும் குற்றவாளிகளுக்கு சட்டத்தினால் சரியான தீர்ப்புகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தக் கோரியும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை திசை திருப்பும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளைக் கண்டித்தும் நேற்று (18) மட்டக்களப்பில் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.06.18
சீட்டிழுப்பு இலக்கம் 6222
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Z 6 7 3 1 2 2

அத சம்பத
Z 3 1 2 2
சீட்டிழுப்பு இலக்கம் 0797

சுப தவசக்
திகதி 2026.06.18
சீட்டிழுப்பு இலக்கம் 6338
கடகம் 03 08 62 4190

தன நிதானய
திகதி - 2026.06.18
சீட்டிழுப்பு இலக்கம் - 2252
K 09 19 73 76 K

மெகா பவர்
திகதி 18/06/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2570
H 10 22 34 59 70

NLB ජය JAYA
திகதி 2026.06.18
சீட்டிழுப்பு இலக்கம் 0490
G 7 7 9 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4464
சீட்டிழுப்பு திகதி 18.06.2026
J 03 06 14 23

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.06.18
சீட்டிழுப்பு இலக்கம் 1531
கும்பம் 17 34 35 58 கும்பம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பிரி தன சம்பத
18.06.2026 வெற்றி வாரம் 0930
U 4 1 3 6 0 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,781,840.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3196 / 25000 பணப் பரிசு 61100
சீட்டிழுப்பு திகதி 2026.06.18 / தினம் வியாழக்கிழமை
05 15 32 55 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.135,854,224.00

சனிதா
திகதி 18.06.2026 வெற்றி வாரம் 5357
06 51 60 61 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,843,229.60
செகண்ட் சான்ஸ் ரூ. 50,000/- 71891

சசிரி
வெற்றி வாரம் 1026
சீட்டிழுப்பு திகதி 18.06.2026 வியாழக்கிழமை
05 31 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,100,440.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4908
சீட்டிழுப்பு திகதி 18.06.2026 / தினம் வியாழக்கிழமை
12 30 37 51 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,367,714.80

லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 11 15 21 24 48
2372 18.06.2026 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.296,444,109.20

அத கோட்டிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை வெற்றி வாரம் 3022 சீட்டிழுப்பு திகதி 2026.06.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,687,517.60
11 15 16 17 J


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்
பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக
கடமையாற்றி 19.06.2026 இன்று
பணியிலிருந்து ஓய்வுபெறுகின்ற

## உயர்திரு.அமரசிங்கம் கேதீஸ்வரன்

(இலங்கை திட்டமிடல் சேவை தரம் II)
BA (HONS), M.Phil (ECN), Dip in Planning




### சேவை விபரங்கள்

| இல | பதவிகள் | காலப்பகுதி | சேவையாற்றிய நிலையம் |
|---|---|---|---|
| 01 | உதவி விரிவுரையாளர், | 1992 – 1994 | பொருளியல்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம். |
| 02 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பயிலுனர் | 1994 – 1995 | மாவட்டச் செயலகம்–முல்லைத்தீவு. |
| 03 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பயிலுனர் | 1996 – 1997 | மாவட்டச் செயலகம், கிளிநொச்சி. |
| 04 | அபிவிருத்தி உதவியாளர் | 1997 – 1999 | மாவட்டச்செயலகம், கிளிநொச்சி. |
| 05 | அபிவிருத்தி உதவியாளர் | 1999– 2001 | பிரதேச செயலகம் – பச்சிலைப்பள்ளி |
| 06 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2001– 2005 | மாவட்ட செயலகம் – கிளிநொச்சி |
| 07 | திட்ட முகாமைத்துவ நிபுணர் | 2005– 2008 | வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டம்,திருகோணமலை |
| 08 | மாவட்ட திட்ட பணிப்பாளர் | 2008– 2009 | வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டம். |
| 09 | உதவி திட்டமிடல் பணிப்பாளர் | 2009– 2019 | மாவட்ட செயலகம் – கிளிநொச்சி |
| 10 | பிரதி திட்டமிடல் பணிப்பாளர் | 2019-2026 | மாவட்ட செயலகம் – கிளிநொச்சி |
| 11 | மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் (பதில் கடமை) | 2023-2024 | மாவட்ட செயலகம் – கிளிநொச்சி |
| 12 | பிரதி திட்டமிடல் (பதில் கடமை) பணிப்பாளர் | 2025-2026 | பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி |

பிறர்க்காக உழைத்தால் .. பெற்ற
பிள்ளைகள் உயர்வார் என்று
நிறுவிற்று இவரின் வாழ்வு!
நின்று சுவட்டுறவில் ஆழ்ந்து
உறவுகள் பெருக வாழ்ந்து
உரை, கவி தனிலும் தேர்ந்து
குறைந்தது சேவைக்காலம்
நினைக்கும் மண் புகழை நேர்ந்து!

மணிவிழா காணும் இந்த
மண்ணிலே புகுந்து வாழும்
இணையற்ற தீசன்; திட்ட
மிடற்துறை வீரன், நீண்ட
பணி கிளி மண்ணுக் காற்றி
பயன் எதிர்பாராச் சேவை
தனில் உயர் 'கேதீஸ்'.. ஓய்வில்
சரித்திரம் படைக்க வாழ்த்து!

வளவாளன்; பயிற்றுவித்து
மற்றோரை வளர்த்த ஆயன்!
குழம்பிய நாளில் ஊரார்
குறைதீர்க்க உழைத்த தாயன்
'கிளி' மண்ணின் ஆதி அந்தம்
கீதையாய் உரைப்போன்; திட்ட
வழியில் அபிவிருத்தி தேடி
மனதார முயன்றோன்; வாழி!

அறுபது அகவை என்று
ஆர் நம்பக்கூடும்? இன்னோர்
அறுபது காண வல்லோன்
அகப்புறத் துடிப்பைப் பாரும்!
வரும் ஓய்வு... சமூகத்திற்கு
வரம் நல்க... தவங்கள் செய்யும்
சிறப்பான காலம் ஆகி
சேர்ந்து நாம் வாழ்த்துகின்றோம்!

(7871)

வாழ்த்துவோர்: வட மாகாண இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர் சங்கம்

## வேலைவாய்ப்பு

மோட்டார் வாகன காட்சியறைக்கு
பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.
(ஆண்/பெண்)

- பதிவாளர்
- விற்பனைப் பிரதிநிதி
- மேற்பார்வையாளர்

(7874)

076 232 9628

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## பராமரிப்பாளர் தேவை

தோட்டக்காணி பராமரிப்பதற்கு அனுபவமும்
கடின உழைப்பும் கொண்ட தங்கி நின்று
வேலை செய்யக்கூடிய பொறுப்பான
பராமரிப்பாளர் தேவை.

சம்பளம் 70,000/= மேல்

(C-5866)

தொடர்பு: 076 470 6831

## பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்

பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்
ஒவ்வொரு பகிர்வுக்கும் பின்விளைவுகள் உள்ளன.

வெறுப்பையும் பிரிவினையையும் தூண்டும் தகவல்களை உணர்ச்சிவசப்பட்டோ அல்லது திட்டமிட்டோ பகிர்வது கோபத்தையும் வன்முறையையும் அதிகரிக்கிறது.

இத்தகைய பெரும்பாலான கட்டுக்கதைகள் மக்களின் உணர்வுகளை தன்நலத்திற்காக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டு மறைமுக அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக பரப்பப்படுகின்றன.

**நிறுத்துங்கள், சிந்தியுங்கள், உறுதிப்படுத்துங்கள்**
வெறுப்பின் கருவியாக மாறாதீர்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப்படுகிறது.

(7775)

# மரண அறிவித்தல்



தோற்றம்
10 - 11 - 1961

மறைவு
18 - 06 - 2026

## இராமலிங்கம் சத்தியேந்திரா

(ஓய்வு பெற்ற காசாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், சமாதான நீதிவான், நல்லூர் பிரதேச செயலகம், இணக்கசபை உறுப்பினர்)

*82/1, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சத்தியேந்திரா அவர்கள் நேற்று (18.06.2026) வியாழக்கிழமை அன்று காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - தேவாமிர்தம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காசிலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சுமதி (சித்த மருத்துவப்பகுதி, யாழ்.மாநகரசபை) அவர்களின் அன்புக் கணவரும் குலேந்திரா (உள்ளக பயிற்சி மருத்துவர், சித்த மருத்துவ போதனா வைத்தியசாலை, கைதடி), தபேந்திரா (இறுதி வருட மாணவன் - பொறியியல் பீடம், மொறட்டுவை பல்கலைக்கழகம்), அமிர்தஹரணி (மாணவி - யா/நல்லூர் சென்.பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவராசா மாலினிதேவி, தர்மகுலசிங்கம் ரோகினிதேவி, இரவீந்திரன், காலஞ்சென்ற மகேந்திரன், திலகேந்திரன் மற்றும் குலேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிருதரன், நவரத்தினம் தர்சினி (கொலண்ட்), தர்மகுலசிங்கம், புளோரா ரேணுகா, மகேந்திரன் ரஞ்சினி, குலேந்திரன் ரவீந்திராதேவி, திலகேந்திரன் மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் நவரத்தினம், நிம்மதி ஆகியோரின் சகலனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

*தகவல் :*
குடும்பத்தினர்

(7875)

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில்
அமைந்துள்ள Village Hotel
& Indian Restaurantக்கு
Waiter| House Keeper|
Manager தேவை

(7851)

தொடர்புகளுக்கு
076 830 3931

## Physics - 2027 A/L

வெப்பவியல்

Zoom - நேரடி வகுப்புகள்

ஆ.நித்தியானந்தன் (B.Sc, Dip.in Ed)
(முன்னாள் ஆசிரியர் – யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

ஆரம்பம் : 19.06.2026
வெள்ளி இரவு 8.30

(7865)

076 799 9005
Physics Centre, பழம் வீதி, கந்தர்மடம்

## உழவு இயந்திரம் (Tractor) பெட்டியுடன் மாத வாடகைக்கு தேவை


அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள காகித உற்பத்தி தொழிற்சாலைக்கு உழவு இயந்திரம் பெட்டியுடன் மாத வாடகைக்கு தேவை. ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தொடர்பிலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(7873)

தொடர்பு எண்: 077 315 1654

# மரண அறிவித்தல்

## செல்லையா நித்தியானந்தன்



*மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லையா நித்தியானந்தன் அவர்கள் நேற்று (18.06.2026) வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பூமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நித்தியலட்சுமியின் அன்புச் சகோதரரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் முகமாலையில் உள்ள சிவபுரம் மூதாளர் இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை (18.06.2026) இடம்பெற்று பூதவுடல் எழுதுமட்டுவாழ் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.01, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media